# பெரியபுராணத்தில் கலைகளும் பண்பாட்டுக் கூறுகளும்

பன்னிரண்டாம் திருமுறை ஆய்வுமாலை – 2025




**பதிப்பாசிரியர்கள்**

ஆய்வாளர் ச.வாசுதேவன்

கலாநிதி ஜயந்தினி விக்னராஜன்

சைவப்புலவர் சிவப்பிரியா ராஜ்குமார்

பேராசிரியர் இரா.வசந்தமாலை

ஆய்வாளர் ச.தென்பாண்டி

ஆய்வாளர் சரண் கார்த்திக்

# நூல் குறிப்பு


- நூல் : பெரியபுராணத்தில் கலைகளும் பண்பாட்டுக் கூறுகளும்
- மொழி : தமிழ்
- வகை : கட்டுரை
- பதிப்பாசிரியர்கள் : ச.வாசுதேவன், ஜயந்தினி விக்னராஜன், சிவப்பிரியா ராஜ்குமார் இரா.வசந்தமாலை, ச.தென்பாண்டி சரண் கார்த்திக்
- முதல் பதிப்பு : மே-2025
- உரிமை : ஆசிரியர்களுக்கு
- அட்டைப்படம் நூல்வடிவமைப்பு : ச.வாசுதேவன்
- வெளியீடு : இடையன் இடைச்சி பதிப்பகம் சில்லாங்காட்டுப்புத்தூர் அரச்சலூர் – ஈரோடு.
- தொடர்புக்கு : 9942050065, 6383366377 nadunattutamizhan150@gmail.com
- நூலின் அளவு : 1/8 டெமி
- பக்கங்கள் : 240
- ISBN : 978-81-910199-7-1
- விலை : ரூ . 500/-

# பொருளடக்கம்

1. சேக்கிழாரின் இசைப்புலமை..........................................07

2. பெரியபுராணத்தில் இசைக்கலையும் பண்பாட்டுக் கூறுகளும்..........................................15

3. பெரியபுராணத்தில் ஓவியக்கலையும் பண்பாட்டுக் கூறுகளும்..........................................56

4. பெரியபுராணத்தில் பண்பாட்டுக் கூறுகளும்.............82

5. பெரியபுராணத்தில் யாழும் வீணையும்........................89

6. பெரியபுராணத்தில் 'பைய' எனும் பண்பாட்டு சொல்லாட்சி..........................................95

7. பெரியபுராணம் உணர்த்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும்..........................................101

8. பெரியபுராணத்தில் பண்பாட்டு விழுமியங்கள்.........108

9. சைவத்தமிழ் வளர்த்தப் பெண்புலவர் காரைக்கால் அம்மையார்..........................................126

10. பெரியபுராணத்தில் நுண்கலைகள்........................133

11. தொல்மரபுப் பண்பாட்டில் பெரியபுராணப் பனுவல் உருவாக்கமும் காட்சியமைப்பு வர்ணனைகளும் : திருநாட்டுச் சிறப்பை முன்வைத்து..............................143

12. பெரியபுராணத்தில் ஆடற்கலையும் பண்பாட்டுக் கூறுகளும்..........................................155

# பெரியபுராணத்தில் பண்பாட்டு விழுமியங்கள்

முனைவர் தே. தேன்மொழி
உதவிப்பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைகழகம்
சென்னை -117
செல் : 8610928727

**முன்னுரை**

தமிழகப் பண்பாட்டு விழுமியங்களை நன்கு புலப்படுத்தும் சைவத்தமிழ் இலக்கியங்களுள் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர்புராணம் தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றது. பன்னிரு திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பெற்றுள்ள இப்புராணம் சிவனடியார்களின் வாழ்வியலையும் சைவப்பண்பாட்டினையும் புலப்படுத்தும் சைவத்தமிழ்க் காப்பியமாகத் திகழ்கின்றது. உள்ளத்தாலும் உணர்வாலும் சொல்லாலும் செயலாலும் தூய்மை கொண்ட சிவனடியார்களின் வரலாற்றை மக்கள் அறிந்து அவர்கள் வாழ்ந்து காட்டிய நற்பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றுவதன் வாயிலாகத் தாமும் சமுதாயத்திற்குப் பெரும் பணியாற்ற முடியும் என்ற குறிக்கோளுடன் பெரியபுராணம் எனும் பண்பாட்டுப் பனுவலைச் சேக்கிழார் வழங்கியுள்ளார். இத்தகைய பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள பண்பாட்டு விழுமியங்களை இனம் காணுவதை இக்கட்டுரை முன்னெடுக்கிறது.

**பெரியபுராணம்**

இந்நூலை இரு காண்டங்களையும் பதின்மூன்று சருக்கங்களையும் 78 புராண உட்பகுப்புக்களையும் 4286 விருத்தங்களையும் கொண்டதாகச் சேக்கிழார் கட்டமைத்துள்ளார். இச்சைவக் காப்பியத்துள் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த தனியடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர்

எழுபத்திருபருடைய வரலாறும் மகிமையும் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது. இத்திருத் தொண்டர்களின் வாழ்க்கை வரலாறுகள் சைவப்பண்பாட்டு வரலாறுகளாக வரையறுக்கத் தக்கவை எனலாம். இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் செய்யும் பணிகளையே சேக்கிழார், திருத்தொண்டு (Divine Service) என்று பெரியபுராணத்தில் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

பெரியபுராணம் பண்பாட்டு ஒற்றுமையைப் புலப்படுத்தும் சைவக் கருவூலமாக விளங்குகின்றது. பெரியபுராணம் கூறும் சிவனடியார்கள் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர். ஒரே தொழிலை மேற்கொண்டவர்களும் அல்லர். ஒரே இனத்தவரும் அல்லர். ஒரே குலத்தவரும் அல்லர். எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் இவர்கள் அனைவரும் சிவனையும் சிவனடியார்களையும் ஒருவராகவே நினைந்து அன்புடன் வழிபடும் சிவத்தொண்டர்கள் என்ற பண்பாட்டு ஒற்றுமை உடையவர்களாக விளங்கினர் என்பதேப் பெரியபுராணப் பண்பாட்டின் தனிச்சிறப்பாகும். வேற்றுமையில் ஒற்றுமையைப் புலப்படுத்தும் சைவத் தமிழ்க் காப்பியமாகப் பெரியபுராணம் திகழ்கின்றது.

பெரியபுராணம் சோழப்பேரரசின் ஒடுங்குதிசைக் காலத்தில் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சைவக் காப்பியமாகும். பக்தி நெறியின் பயனையும் திருத்தொண்டின் சிறப்பினையும் மீண்டும் மக்களுக்கு நினைவூட்ட வேண்டிய காலச் சூழ்நிலை சேக்கிழார் காலத்தில் நிலவியது. வீழ்ச்சிப் பாதையில் விரைந்து சென்றுகொண்டிருந்த சோழப் பேரரசை மீண்டும் பழைய நிலைக்குச் செலுத்தித் தொண்டு, குறிக்கோளுடையவாழ்வு போன்ற பண்பாட்டு விழுமியங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர இறுதியாகச் செய்யப்பெற்ற முயற்சியின் விளைவுதான் பெரியபுராணமாகும்.

அறநெறிகள் பல உள்ளன. நீதிகள் உள்ளன. ஆசாரங்கள் உள்ளன. அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாகச் சுட்டக்கூடிய சொல்லே விழுமியம். அவை மக்கள் வாழ்ந்து அறிந்து அடுத்த தலைமுறைக்குக் கொடுத்துச்செல்லும் நெறிகள் குறித்த நம்பிக்கை மற்றும் மனக்கட்டுமானமே விழுமியம் (கலைச்சொற்கள் பற்றி..., ஜெயமோகன்) ஆகும்.

தனி மனித விழுமியங்கள் தனி மனிதருடைய வாழ்வை ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்டவை. அவை ஒட்டுமொத்தமாகச் சமுதாயத்தின் ஒழுங்கமைவுக்கு அத்தியாவசியமாக இருக்க வேண்டும் என்பதில்லை.ஒரு சமூகத்தில் பொதுவாக உள்ள விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகின்றன. இன்னொரு வகையில், மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்கு எந்தெந்த விழுமியங்கள் சிறப்பாகத் தேவைப்படுகின்றனவோ அவை பண்பாட்டு விழுமியங்கள் எனலாம். பண்பாட்டு விழுமியங்கள் என்பது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் பின்பற்றப்படும் விழுமியங்கள். இவை அந்த சமூகத்தின் கதைகள், பழமொழிகள், மற்றும் சமயங்களில் வெளிப்படும்.இது வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டியாக அமைகிறது, சமூகத்தில் ஒருமைப்பாட்டை உருவாக்குகிறது, ஒருவரின் நடத்தைகளை வடிவமைக்கிறது, ஒரு சமூகத்தின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கிறது.

**சமயப் பண்பாட்டு விழுமியம்**

சமயமும் பண்பாடும் பிரிக்கமுடியாதவை. சமயம் தான் பண்பாடு என்றும் பண்பாடு தான் சமயம் என்று அறிஞர்கள் குறிப்பிடுவர். சமயத்திற்குச் சமயம் பண்பாட்டு மரபுகள் வேறுபடும். சைவ சமயம் காட்டும் பண்பாட்டு மரபுகள் பலவாகும். பெரியபுராணம் புலப்படுத்தும் சமயப்பண்பாட்டு விழுமியங்கள் இங்கு நோக்கப்படுகின்றன.

**பணிவு**

சம்பந்தர், அப்பர் சந்திப்பு பணிவு எனும் பண்பாட்டு விழுமியத்தை புலப்படுத்துகின்றது. சம்பந்தர் திருநாவுக்கரசரை, "அப்பரே" என்று அழைக்கத் திருநாவுக்கரசர் "அடியேன்" என்று கூறுவது பணிவின் வெளிப்பாடாகும். வயது குறைந்தவர்கள் வயது கூடியவர்களிடம் பணிவு காட்டினால் வயது கூடியவர்கள் வயது குறைந்தவர்களிடம் பணிவாக நடப்பர் என்பது அப்பர் சம்பந்தர் வாழ்வு காட்டும் பணிவு எனும் பண்பாட்டுப் பதிவாகும். எண்பத்தொரு வயது நிரம்பிய அப்பர் பதினாறு வயது நிரம்பிய சம்பந்தரை அடிபணிந்து தொழுதமை பணிவு எனும் பண்பாட்டின் முதிர்ச்சி எனலாம்.

**முடிவுரை**

இவ்வாறாக தமிழகத்தில் பலநூறு ஆண்டுகளாக நிலவிவந்த தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள், சமயப் பண்பாட்டு விழுமியங்கள், கல்விப் பண்பாட்டு விழுமியங்கள், கலைப் பண்பாட்டு விழுமியங்கள், சமூகப் பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் தொண்டு, அன்பு, பணிவு, பொறுமை, மனிதநேயம், ஆன்மநேயம், மன்னிக்கும் மாண்பு, கற்பு, நேர்மை, சொற்பிறழாமை போன்ற பண்பாட்டு விழுமியங்கள் என்பனவற்றைப் புலப்படுத்தும் பண்பாட்டுக் கருவூலமாகப் பெரியபுராணம் விளங்குவது நன்கு புலப்படுகின்றது.


**துணை நூல்கள்**

1. இராசமாணிக்கனார்,மா., 1969, சேக்கிழார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

2. கலைவாணி இராமநாதன், 1997, சைவசித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள், கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.

3. கோபாலகிருஷ்ண ஐயர், ப., 1992. இந்துப்பண் பாட்டு மரபுகள், வித்யா வெளியீடு, யாழ்ப்பாணம்.

4. பக்தவத்சலபாரதி, 2003, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
5. சண்முகலிங்கன், என்., 2001, மரபுகளும் மாற்றங்களும், நாகலிங்கம் நூலாலயம், யாழ்ப்பாணம்.
6. சுப்பிரமணிய முதலியார், C.K., 1933, சேக்கிழார். சாது அச்சுக் கூடம், சென்னை.
7. சுப்பிரமணியபிள்ளை,கா., 1975, சேக்கிழார் அடிகள் வரலாறும் பெரியபுராண ஆராய்ச்சியும், கழகம், சென்னை.
8. ஞானசம்பந்தன்,அ.ச., 1994, பெரியபுராணம் ஓர் ஆய்வு, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை.
9. Tylor, E.P., 1958, Primitive Culture, Harper & Row, New York. Panikkar, K.M, 1974, Essential Features of Indian Culture, Bharathiya Vidya Bhavan Bombay.
10. பேராசிரியர் மா.வேதநாதன், 2011, பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



**களரி கலை இலக்கியக் களம்,** கள்ளக்குறிச்சி – தமிழ்நாடு

**அருந்தமிழ் அரியணை உலகத்தமிழாய்வு மையம்,** புதுச்சேரி – இந்தியா

**சூரியத்தமிழ்த் தொலைக்காட்சி,** பிரித்தானியா – நெதர்லாந்து



# பெரியபுராணத்தில் கலைகளும் பண்பாட்டுக் கூறுகளும்

# “Arts and Cultural Elements in the Periyapuranam”

**[ஒரு வாரம் தொடர் இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம்]**

**A ONE-WEEK INTERNATIONAL CONFERENCE THROUGH ONLINE**

## சான்றிதழ்

திரு/திருமதி/செல்வி/முனைவர் தே. தேன்மொழி, உதவிப் பேராசிரியர் வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை அவர்கள் 26.05.2025 முதல் 31.05.2025 அன்று வரை ஒரு வாரம் தொடர்ந்து இணையவழியில் நடைபெற்ற “பெரியபுராணத்தில் கலைகளும் பண்பாட்டுக் கூறுகளும்” எனும் பொருண்மையிலானப் பன்னாட்டுக் கருத்தரங்கில் பெரிய புராணத்தில் பண்பாட்டு விழுமியங்கள் என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தளித்தார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ஆய்வாளர் **ச.வாசுதேவன்** | எழுச்சிக்கவி **க.சரவணன்** | முனைவர் **சாந்தி ரவீந்திரன்** |
| கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் | கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் | கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் |
| கள்ளக்குறிச்சி – தமிழ்நாடு | புதுச்சேரி – இந்தியா | பிரித்தானியா – நெதர்லாந்து |